967

- 6 ஆக 2010
1694/10

06/08/2010

## சுருக்கம்

அறிவிப்புகள் - வரவு செலவு கூட்டத்தொடர் அறிவிப்புகள் - ஓட்டுநர் பயிற்சி - ஓட்டுநர் பயிற்சி திறன் கூட்டுதல் - கனரக வாகன ஓட்டுநர்களுக்கு ஒருநாள் சிறப்பு பயிற்சி சான்று - ஓட்டுநர் உரிமம் புதுப்பிக்க / உரிமம் மேற்குறிப்பு செய்ய கட்டாயமாக்குதல் - ஆணை வெளியிடப்பட்டது - திருத்தம் வெளியிடப்படுகிறது.

---

**உள் (போக்குவரத்து - 5) துறை**

அரசாணை (நிலை) எண் : 697 நாள் : 05.08.2010

**படிக்கவும்**

1. அரசாணை (நிலை) எண் 604 உள்துறை நாள் 26.5.2008.
2. போக்குவரத்து ஆணையரின்கடிதம் எண் எச்1/22370/08 நாள் 25.7.2009, 21.10.2009, 8.2.2010,23.3.2010 மற்றும் 14.7.2010.

---------

**ஆணை :-**

அரசாணை(நிலை)எண் : 604,உள்துறை, நாள் 26.5.2008 - க்கு கீழ்க்காணும் திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன .

மேற்கூறப்பட்ட அரசாணை, பத்தி 5, ஈ - ல் தற்போதுள்ள "போக்குவரத்து ஆணையரால் அங்கீகரிக்கப்பட்ட, கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிப்பள்ளிகள் மட்டுமே மேற்கண்ட பயிற்சியினை அளித்து சான்றுகள் வழங்கும்" என்ற சொற்றொடர் நீக்கப்பட்டு, அதற்கு பதிலாக "இணைப்பு - ல்குறிப்பிட்டுள்ள 3 சாலைப்போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் 18 மாநில அரசு போக்குவரத்து கழகங்களின் கட்டுப்பாட்டில் செயல்படும் நிறுவனங்களால் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளித்து முடிவு சான்றுகள் வழங்கப்படும்" என்ற சொற்றொடர் பத்தி 5, ஈ - ஆக சேர்க்கப்பட வேண்டும்.

2. மேற்கூறப்பட்ட அரசாணையில்

"கனரக வாகன ஓட்டுநர் ஒருநாள் பயிற்சிக்கென ரூ. 250/- (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 21 பயிற்சி நிறுவனங்களால் பயிற்சிக்கட்டணமாக வசூலிக்கப்படும்" என்ற சொற்றொடர் பத்தி 5, உ - ஆக சேர்க்கப்பட வேண்டும்.

3. மேற்கூறப்பட்ட அரசாணையில்

" போக்குவரத்து துறையில் பணியாற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள் கனரக வாகன உரிமத்தை பெற்றிருத்தல் வேண்டுமென்ற தகுதி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், அவர்கள் இந்த ஒருநாள் பயிற்சியிலிருந்து விலக்களிப்படுகிறார்கள்" எனும் சொற்றொடர் பத்தி 5 - ல் 'எ' ஆக சேர்க்கப்பட வேண்டும்."

(ஆளுநரின் ஆணைப்படி)

கு.ஞானதேசிகன்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
போக்குவரத்து ஆணையர், சென்னை -5
காவல்துறை தலைமை இயக்குநர், சென்னை -4.
போக்குவரத்து செயலர், சென்னை -9.
மேலாண்மை இயக்குநர்,
போக்குவரத்துக் கழகம். சென்னை - 2
அசல் அரசாணை (நிலை) 604 உள்துறை நாள் 26.5.2008.
உதிரி / இருப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்